நீதிபதிகளுக்கு வாகன வசதிகள், சிராக்ஸ் காப்பி எடுக்கும் எந்திரங்கள் தருவது., டேப் ரிக்கார்டர் தருவது, டெலிபோன் வசதிகள் செய்து தருவது போன்ற பல பணிகளைச் செய்திருக் கிறோம். ஆனால், கட்டிடங்களைப் பொறுத்த வரைக்கும் இன்றல்ல, நேற்றல்ல, கடந்த 35 ஆண்டுகளாக நீதிமன்றங்களுக்கு நிதி ஒதுக்கும் முறையில் மத்திய அரசு ஏதோ இதை கவனத்தில் கொள்ளாமல் நான்-பிரையாரிடி என்ற முறையில் ஒதுக்கிவிட்டது. அப்படி கூடாது, அதிகப்படியான நிதியை ஒதுக்க வேண்டு மென்று மத்திய அரசை, மாநில அரசு வற்புறுத்தி, இந்த அடிப் படையில் பல இடங்களில் இடிந்து விழக்கூடிய கட்டிடங்களைக் கட்டுவதற்கு மத்திய அரசிடமிருந்து மாநில அரசிற்கு பணம் கிடைக்கவில்லை யென்றாலும், மாநில அரசு 3 கோடி ரூபாய் ஒதுக்கி, இந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறோம். இந்த அடிப்படையில் இந்தப் பிரச்னையை அணுகி, இந்தக் கட்டிடத் தைப் பொறுத்தவரைக்கும் விரைவில் கட்டி முடிக்க தக்க நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும்.

சுருளிப்பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம்.

295 (*வினா எண். 14172)— திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சுருளிப் பட்டியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

மருத்துவக் கல்வியை தமிழில் போதிக்கும் திட்டம்

296 (*வினா எண். 14479)— திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் மருத்துவக் கல்வியைத் தமிழில் போதிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : ஆம்.

திரு. என். வரதராஜன் ; பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மருத்துவத் துறையில் தாய் மொழியிலே பயிற்சி பெறு வதால், மிக துரிதமாக வளர்ச்சி அடையவும், இன்னும் நுண்ணியமாக கல்வியைக் கற்றுக்கொள்ள முடியும் என்று, உலகத் திலுள்ள பல நாடுகள் அப்படி முன்னேறி வருகிறது. அண்டை மாநிலத்திலேகூட அவ்வாறு தாய் மொழியிலே பயிற்சி நடத்திக்